In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 163/2023 | Prosecution witness P.W.14

Name: Sheick Bareeth | Calling:

Father Name: | Religion:

Village: | Caste:

Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28-04-2025.

**(Accused present. Accused absent, petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல், செல்லாண்டியம்மன்கோவில் தெருவில் வசிக்கிறேன். எஸ்.எஸ்.வெல்டிங் ஒர்க்ஷாப்பில் வேலை செய்கிறேன். நான் காளிதாசிடம் இருந்து சிவப்பு கலர் ஷிப்ட் கலர் எண்.TN-57-AB-4655 என்ற வாகனத்தை காளிதாஸ் எனக்கு தெரிந்தவர் என்பவர்தால் அவரிடம் இருந்து ஓசியில் வாங்கி 11.07.2023ம் தேதியிலிருந்து நான் ஓட்டிக்கொண்டிருந்தேன். 19.07.2023ம் தேதி என் ஏரியாவைச் சேர்ந்த முகமது இர்பான் (2வது எதிரி) என்பவர் ஆஸ்பத்திரி எமர்ஜென்சிக்காக என்னிடம் கேட்டார். அதற்கு நான் அது என் கார் கிடையாது, காளிதாஸ் என்பவருடை கார் எனச்சொன்னார். அதற்கு முகமது இர்பான் ஆஸ்பத்திரியில் இருக்கும் அவரது மனைவியை டிஸ்சார்ஜ் செய்துவிட்டு காரை ஒப்படைப்பதாகச் சொன்னார். நான் வெளியில் வேலையாக இருந்தேன். நான் என் அம்மாவிற்கு போன் செய்து முகமது இர்பான் வந்தார் கார் சாவியை எடுத்துக்கொடுக்கும்படி சொன்னேன். என் அம்மாவிடமிருந்து முகமது இர்பான் காரை வாங்கிச்சென்றார். 20.07.2023ம் தேதி நான் முகமது இர்பானுக்கு போன் செய்தேன். போன் சுவிட்ச்ஆப் ஆக இருந்தது. அதன்பிறகு எந்த பதிலும் இல்லை. 11.08.2023ம் தேதி சரவணன் கொலைவழக்கு சம்மந்தமாக டிஎஸ்பி என்னை கூப்பிட்டார். ஆய்வாளரும் விசாரித்தார். காளிதாஸ்

எனக்கு ரூ.1,20,000/— கொடுக்கவேண்டியிருந்தது. அவரது காரை நான் முகமது இர்பானுக்கு கொடுத்து திரும்ப வராததால் மேற்கொண்டு ரூ.80,000/— காருக்காக காளிதாசுக்கு கொடுப்பதாக நான் ஒப்புக்கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் கார் அந்தக்கார்தான் என்றால் நான் முகமது இர்பானுக்கு கொடுக்கும்போது சேதாரம் இல்லாமல் இருந்தது. அந்த கார் சாபொ.1. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை—

மேற்படி கார் எனக்கு பாத்தியப்பட்டது என உரிமை கோரி அந்த காரை திரும்ப பெற நீதிமன்றத்தில் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி காருக்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும், அந்த காருக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை — இல்லை.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.28 17:06:45 +0530

Principal District Judge,
Dindigul.